[1990 மே 10

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர்: தலைவர் அவர்களே, இந்திய திரு நாட்டில் தமிழகமானது தொழில் துறையில் முதலிடம் பெற வேண்டும் என்கின்ற உணர்வோடு கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் அயராது பாடுபடுகிறார்கள். தொழில் துறைக்கு மிகவும் அவசியமான இந்த அலுவலகங்கள் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை அடிப்படையில் விரிவு செய்யப்பட வேண்டும். ஏனெனில் கடந்த 20 அல்லது 25 ஆண்டுகளாக முக்கியமாக இந்த அலுவலகங்கள் விரிவுபடுத்தப்படாமல் இவற்றின் வேலைத்திறன் பாதிக்கப்பட்டு உள்ளது. தலைவர் கலைஞர் அவர்களின் எண்ணம் ஈடேறத் தக்கவகையில் மிக அவசியமான அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக இந்த அலுவலகங்களை விரிவுபடுத்த இந்த அரசு......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் 2 மாதத்தில் செய்கிறோம் என்று சொல்கிறார். நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, டிபார்ட்மெண்ட் எக்ஸ்பேன்ஷன் வேண்டும் என்று கேட்கிறார்கள். அது தானே கேட்கிறீர்கள்? உறுப்பினருடைய யோசனை நல்ல கருத்து. அதை இலாக்கா பரிசீலிக்கும்.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : தலைவர் அவர்களே, அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் ஏற்கனவே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்திருப்பது போல் சப்டிவிஷன் அலுவலகங்கள் அமைக்கப்பட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, அதையும் அரசு பரிசீலிக்கும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

* 1898 திருமதி ரமணி நல்லதம்பி :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நாங்குனேரியைச் சேர்ந்த இட்டமொழி விஜய அச்சம்பாடு ஊராட்சியைச் சேர்ந்த இட்டமொழியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1990 மே 10]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விஜய அச்சம்பாடு ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த இட்டமொழி கிராமத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது,

அவசர தீவிர சிகிச்சைப் பகுதி.

*6200 திரு. சி. கோவிந்தராஜன் :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாவட்ட வட்ட மருத்துவமனைகளில் அவசர தீவிர சிகிச்சைப் பகுதி (Intensive Medical Care Unit) அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே.

இல்லை.

திரு. சி. கோவிந்தராஜன் : தலைவர் அவர்களே, இந்த தீவிர சிகிச்சை குறைந்தபட்சம் மாவட்ட தலைநகரங்களில் இருக்கக்கூடிய மருத்துவமனைகளில் கூட இல்லை என்று சொன்னால் அங்கு ஏராளமான மக்கள் சென்னையை நோக்கி வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது அல்லது வேறு எங்கேயோ பெரிய மருத்துவமனையை நோக்கிச் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. பல்வேறு திட்டங்களை மக்களுடைய நல்வாழ்வுக்காக கொண்டு வரக்கூடிய நிலைமையில் இருக்கக்கூடிய இந்த அரசு இந்த மாவட்ட மருத்துவமனைகளில் இப்படிப்பட்ட தீவிர சிகிச்சைப் பகுதியைத் துவக்குவதற்கு அதற்கான மருத்துவர்களைப் போட்டு பயிற்சியும் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, தீவிர மருத்துவ சிகிச்சைப் பிரிவு மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும் உருவாக்க வேண்டும் என்று சொன்னால் அதற்கான நிதி ஆதாரம் இப்போது அரசிடம் இல்லை. மேலும் மாவட்டங்களில் இப்போது தீவிர இருதய சிகிச்சைப் பிரிவு துவக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு 15 மாவட்ட மருத்துவமனைகளில் இப்போது அது துவக்கப்படுகின்ற